**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர்.**

**முன்னிலை : செல்வி.ஆர்.ஸ்ரீநிதி.B.A., L.L.B.(Hons), L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1**
**கடலூர்.**

2026-ம் ஆண்டு மே மாதம் 18-ஆம் நாள் திங்கள்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம் வைகாசி 04-ம் நாள்

CNR. No. TNCD06-004120-2019

ஆண்டுபட்டிகை வழக்கு எண். 881/2019

**(As occurrence and filing of this case was before 01.07.2024, the provisions of BNS and BNSS is not applicable in this case)**

அரசுக்காக, உதவி ஆய்வாளர்
தூக்கணாம்பாக்கம் காவல் நிலையம்
குற்ற எண். 53/2018

....குற்றமுறையிடுபவர்

-- எதிர் --

தமிழ்செல்வன் (வயது-19)
த/பெ. தேவலிங்கம் ....எதிரி

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட**
**R.O.C.No. 814/2020/RG/F1 (P.Dis.No. 36/2021) உத்தரவு மற்றும் Rule 106 Cr.R.P.-ன்படி**

**CASE SUMMARY**

| | | | |
|---|---|---|---|
| i) The Period of Remand of the Accused: | Date of Remand | Date of surrender | Released on Station Bail |
| | -- | -- | 16.05.2018 |
| ii) Date of filing of the | Filing of complaint | Filing of Final Report | |

| | | | |
|---|---|---|---|
| Complaint / Final report in the Court | 01.05.2018 | 03.12.2018 | |
| iii) The date of questioning of the Accused U/s.240 of the Code of Criminal Procedure, 1973 | 05.03.2022 | | |
| v) Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the Code | Crl.M.P.No. | Date of Filing | Result |
| | - | - | - |
| v) Date of examination in-chief and cross-examination of a witness | Name of the Witness | Date of Chief | Date of Cross |
| | 1.திரு. தமிழரசன் | 30.05.2022 | 30.05.2022 |
| | 2.திரு. கந்தன் | 07.02.2023 | 07.02.2023 |
| | 3.திரு. முத்தரசன் | 07.02.2023 | 07.02.2023 |
| | 4.திரு. தமிழரசன் | 09.06.2023 | 09.06.2023 |
| | 5.திரு. அழகநாதன் | 09.06.2023 | 09.06.2023 |
| | 6.திரு. கர்ணன் | 09.06.2023 | 09.06.2023 |
| | 7.திரு. ரவிக்குமார் | 25.06.2024 | 25.06.2024 |
| | 8. திரு. கார்த்திக் | 25.06.2024 | 25.06.2024 |
| | 9.திரு. செல்வம் | 25.06.2024 | 25.06.2024 |
| | 10.திரு. ராஜேஷ் (மருத்துவர்) | 25.06.2024 | 25.06.2024 |
| | 11. திரு. சக்திவேல் | 11.05.2026 | 11.05.2026 |

| | | | |
|---|---|---|---|
| | (உதவி ஆய்வாளர் ஓய்வு) | | |
| | 12. திருமதி.சரஸ்வதி (காவல் ஆய்வாளர்) | 13.05.2026 | 13.05.2026 |
| vi) Date of examination of the Accused U/s.313(1)(b) Cr.P.C. | 14.05.2026 | | |
| vii) Details of abscondence of an Accused and his appearance / production, as the case may be; and | Nil | | |
| viii) Grant of stay by superior Courts and the results there of: | Nil | | |

இவ்வழக்கானது 19.12.2019-ந் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 14.05..2026-ந் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி.நிவேதா அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர திரு.V.பாலகுரு அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கடந்த 30.04.2018 ந் தேதி இரவு 23.35 மணிக்கு பட்டியல் சாட்சி-1 தமிழரசன் என்பவரின் நண்பர் அஜித் என்பவருக்கு பிறந்தநாள் விழா கொண்டாடவேண்டி இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் மற்றும் எதிரி தமிழ்செல்வன் ஆகிய இருவருடன் சேர்ந்து பள்ளிப்பட்டு சென்று சாட்சி-1ன் நண்பர் பிரதாப் என்பவரிடம் PY-05-W-8750 என்ற பதிவெண்கொண்ட Hero Splendor + இருசக்கர வாகனத்தை இரவலாக வாங்கி கொண்டு மூவரும் ஏம்பலம் சென்று, அங்கு சென்று கேக் மற்றும் சாக்லேட் வாங்கிகொண்டு இரவு 11.00 மணிக்கு ஏம்பலத்திலிருந்து புறப்பட்டு நல்லாத்தூர் to ராசாபாளையம் செல்லும் ரோட்டில் எதிரி இருசக்கர வாகனத்தை

ஓட்டி, சாட்சி-1 நடுவிலும், பின்னால் இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் என்பவரும் அமர்ந்து கொண்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஸ்ரீ அன்னை ஹாலோபிளாக் எதிரில் வரும்போது எதிரி தான் ஓட்டி வந்த இரண்டு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து ரோட்டின் இடது புறமாக உள்ள பள்ளத்தை தவிர்ப்பதற்காக ஒதுங்கும்போது நிலைதடுமாறி கீழே விழுந்ததில் எதிரிக்கு பின்னால் உட்கார்ந்து இருந்த சாட்சி-1க்கு கொடுங்காயத்தையம், தமிழ்வாசன் (எ) முருகன் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார் என்று தூக்கணாம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 279, 338, 304(A) IPC -ன் படி குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207-ன்படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

4) **குற்றச்சாட்டு** :-

எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு எதிரியிடம் அவர் மீதான குற்றம் குறித்து வினவியபோது எதிரி தன் குற்றத்தை மறுத்தார். எதிரி தன் குற்றத்தை மறுக்கவே வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு போதுமான ஆதாரம் இருப்பதாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, எதிரியிடம் இதச பிரிவுகள் 279, 338, 304அ -ன் கீழ், குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிக்கு தமிழில் படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி அல்ல என கூறினார்.

5) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 19 வரையான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சியாரும் விசாரிக்கப்படவில்லை.

**6) அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

**புகார்தாரரான (அ.சா.1) தன்னுடைய முதன்மை விசாரணை சாட்சியத்தில்,** கடந்த 01.05.2018 அன்று நானும், எனது நண்பரான தமிழ்வாசன் (எ) முருகனும், எங்களுடைய நண்பர் செந்தில் என்பவரின் பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு, என்னுடைய நண்பன் முருகன் வண்டியை ஓட்டிக்கொண்டு நான் வண்டியில் அமர்ந்து கொண்டு வரும்போது, வீடு திரும்பும் போது இரவு 8.00 மணியளவில் நல்லாத்லூர் பேருந்து நிறுத்தம் அருகே வந்துக்கொண்டிருந்தபோது எனது நண்பர் அங்கு ரோட்டில் உள்ள கல்லின் மீது வண்டியை ஏற்றிக் இறக்கியதில் நானும் வண்டியை ஓட்டிவந்த எனது நண்பர் முருகனும் கீழே விழுந்துவிட்டோம். அதில் எனக்கு பின்தலையில் அடிப்பட்டது, என் நண்பர் முருகனுக்கு எங்கு அடிப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் கண்விழித்து பார்த்தபோது புதுச்சேரி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிக்சையில் இருந்தேன். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிக்சையில் இருந்தபோது தூக்கணாம்பாக்கம் போலிசார் அங்கு வந்து விசாரணை செய்து என்னிடம் எதுவும் எழுதப்படாத வெள்ளைதாளில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அசாஆ.1 என்னுடையது தான். நான் மேற்படி கையொப்பம் இடும்போது அதில் எதுவும் எழுதப்படாத வெள்ளைதாளாக இருந்தது. தற்போது என்னிடம் புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7) வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான கந்தன் (அ.சா.2) தனது சாட்சியத்தில்,** கடந்த 2018 ம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. இரவு சுமார் 11.00 மணியளவில் நானும், முத்தரசன் என்பவரும் காசாப்பாளையத்தில் உள்ள ரெட்டியார் நிலத்தில் தண்ணீர் பாய்த்துக்கொண்டிருந்தபோது ரோட்டில் திடீர் என்று சத்தம் கேட்டது ஓடிச்சென்று பார்த்தோம். ரோட்டில் உள்ள பள்ளத்தில் இருசக்கர வாகனத்திலிருந்து விழுந்து ஆஜர் எதிரி மற்றும் இன்னொரு நபர் மற்றும் இறந்துபோன நபர் ஆகியோர் மூவரும் அடிப்பட்டு கிடந்தனர். அவர்களை தூக்கிவிட்டு அந்த வழியாக வந்தவர்கள் உதவியுடன் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8) **வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான முத்தரசன் (அ.சா.3) தனது சாட்சியத்தில்,** கடந்த 30.04.2018 ம் தேதி இரவு சுமார் 11.30 மணியளவில் நானும், கந்தன் என்பவரும் காசாப்பாளையத்தில் உள்ள ராமகிருஷ்ணன் ரெட்டியார் நிலத்தில் தண்ணீர் பாய்த்துக்கொண்டிருந்தபோது அன்னை ஹாலோ பிளாக் சிமெண்ட் கடைக்கு எதிரே சத்தம் கேட்டது, நாங்கள் இருவரும் ஓடிச்சென்று பார்த்தோம். அதில் தமிழரசன், தமிழ்வாசன், தமிழ் செல்வன் ஆகியோர் அடிப்பட்டு கிடந்தனர். அவர்களை அந்த வழியாக வந்த இருசக்கர வாகனங்களில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9) **வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான தமிழரசன் த/பெ.தேவலிங்கம் (அ.சா.4) தனது சாட்சியத்தில்,** கடந்த 6 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்ததாக தமிழரசன் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னார். நல்லாத்தூரில் உள்ள ஹாலோ பிளாக் கல் செய்யும் இடத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது கீழே விழுந்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது மூன்று பேரும் அடிப்பட்டு கீழே இருந்தார்கள். நான் அவர்களை கரிக்கலாம்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக புதுவை ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். வேறு எதுவும் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10) **பார்வை மகசர் சாட்சியான அழகநாதன் (அ.சா.5) தனது சாட்சியத்தில்,** என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 01.05.2018 அன்று நானும், கர்ணன் என்பவரும் நல்லாத்தூரில் இருந்து பள்ளிப்பட்டிற்கு வந்துக்கொண்டிருந்தபோது விபத்து நடந்தயிடமான அன்னை ஹாலோ பிளாக் கம்பெனி அருகே விபத்து நடந்தயிடத்தை பார்வையிட்டு தூக்கணாம்பாக்கம் போலிசார் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தனர். பார்வை மகசரில் நானும் என்னுடன் வந்த கர்ணன் என்பவரும் கையெழுத்து போட்டோம். கையொப்பத்துடன் கூடிய பார்வை மகசர் அசாஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11) மற்றொரு பார்வை மகசர் சாட்சியான கர்ணன் (அ.சா.6) தனது சாட்சியத்தில்,** என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 01.05.2018 அன்று நானும், என் மாமா அழகாநந்தம் என்பவரும் நல்லாத்தூரில் இருந்து பள்ளிப்பட்டிற்கு வந்துக்கொண்டிருந்தபோது விபத்து நடந்தயிடமான அன்னை ஹாலோ பிளாக் கம்பெனி அருகே விபத்து நடந்தயிடத்தை பார்வையிட்டு தூக்கணாம்பாக்கம் போலிசார் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தனர். பார்வை மகசரில் நானும் என்னுடன் வந்த என் மாமா அழகாநந்தம் என்பவரும் கையெழுத்து போட்டோம். கையெழுத்து மட்டும் அசாஆ.3 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12) பிரேத விசாரணை சாட்சிகளான ரவிக்குமார் (அ.சா.7), கார்த்திக் (அ.சா.8) மற்றும் செல்வம் (அ.சா.9) தனது சாட்சியத்தில்,** இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் என்பவரின் பிரேத விசாரணையின்போது உடனிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**13) இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் என்பவரின் பிரேதத்தை சடலகூறாய்வு செய்த மருத்துவர் ராஜேஷ் (அ.சா.10) தனது சாட்சியத்தில்,** கடந்த 02.05.2018 ஆம் தேதி மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அன்றைய தினம் காலை 09.15 மணியளவில் தூக்கணம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண்.53/2018 சட்டப்பிரிவுகள் 279,304அ இதச வழக்கில் இறந்துபோன தமிழ்வாசன் என்பவரது இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு, அவரது உடலை சடலக்கூறாய்வு செய்ய வேண்டி துக்கணாம்பாக்கம் காவல் நிலைய காவலர் சுகுமார் என்பவர் மூலம் தூக்கணாம்பாக்கம் காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் அளித்தார். அதை நான் பெற்றுக்கொண்டு காவலர் சுகுமார் அடையாளம் காட்டிய மேற்சொன்ன பிரேதத்தினை காலை 09.30 மணியளவில் சடலக்கூறாய்வு செய்ய தொடங்கினேன். மேற்படி பிரேதத்தில்,

<u>கீழ் கண்டவாறான வெளிகாயங்கள் காணப்பட்டது</u>

1. அவரது இரண்டு கன்னங்களின் மேல்பகுதியல் 10x 6 c.m அளவிலான காயம் சிவந்த நிறத்தில் காணப்பட்டது.

2. அவரது பின்தலைப்பகுதியில் 5x4 செ,மீ அளவில் கன்னிய வீக்கக்காயம் காணப்பட்டது,

3. அவரது வலது தோள்பட்டையில் 9x4 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் காணபப்ட்டட்து.

4. அவரது இடது முன்கை பகுதி 11x6 செ.மீ அளவிலான பலதரப்பட்ட சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

5. அவரது வலது கால் முட்டி கால்பகுதியில் 2x1 செ.மீ அளவில் சிவந்த சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

6 அவரது இடது கால் பாதத்தின் முன்புற பகுதியில் 3x2 செ.மீ அளவில் இரண்டு சிவந்த நிற சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

<u>கீழ்கண்டவான உள்காயங்கள் அவர் சடலக்கூறாய்வில் காணப்பட்டது</u>

1. அவரது மண்டை ஓட்டின் வலதுப்புற வெளிப்பகுதியில் 21x11 செ.மீ அளவில் இரத்தக்கட்டு காணப்பட்டது.

2. அவரது மண்டை ஓட்டின் வலது முன்புறம் நடுப்பகுதி, பின்பகுதியில் 18x6 செ.மீ எலும்பு முறிவும், இரத்தக்கசிவும் காணப்பட்டது.

3. அவர் மூளைப்பகுதியின் மேல்திசுவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

4. அவரது மூளை சிதைந்து இரத்த்க்கட்டுடன் எலும்பு முறிவும் காணப்பட்டது.

5. கழுத்து எலும்பு மற்றும் தண்டுவடம் நல்ல நிலையில் இருந்தது.

6. நாக்கு உள்ளடங்கி, வாய் மூடியநிலையில் உள்ளது.

7. மார்பெலும்பு நெஞ்சுப்பகுதி, மண்ணீரல், இதயம், இதய மேற்பகுதிய ஆகியவை நல்ல நிலையில் இருந்தது.

8. நுரையீரல், மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகம் நசுங்கி காணப்பட்டது.

காலை 10.30 மணிக்கு சடலக்கூறாய்வை முடித்தேன், எனது ஆய்வின்படி மேற்படி நபரின் இறப்பானது மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைப்பதற்கு 12 மணிநேரத்திற்கு முன்னர் ஏற்பட்டிருக்கக்கூடும், மேற்படி நபரின் இறப்பானது அவருடைய மூளைப்பகுதி மற்றும் மண்டை ஓட்டுப்பகுதியில் அடிப்பட்ட அழுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களினாலும், இறந்திருக்கலாம் என்று

சடலக்கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.4 வழங்கினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

14) **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் ஓய்வு திரு.சக்திவேல் (அ.சா.11) தனது சாட்சியத்தில்,** கடந்த 01.05.2018-ம் தேதி தூக்கணாம்பாக்கம் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அன்றைய தினம் காலை 08.00 மணியளவில் கரிக்கலாம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று பாத்தபோது தமிழரசன் த/பெ. குமார், தமிழ்வாசன் (எ) முருகன் மற்றும் தமிழ்ச்செல்வன் ஆகியோர்களை மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்திருந்தார்கள். நான் அதை தொடர்ந்து பாண்டிச்சேரி அரசு மருத்துமனைக்கு சென்றபோது அங்கு உள்நோயாளியாக இருந்த தமிழரசன் த/பெ. குமார் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண்.53/2018 ல் சட்டப்பிரிவுகள் 279, 338, 304(A) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 தயார் செய்து, பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையினை மேல் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

15) **புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி.சரஸ்வதி (அ.சா.12) தனது சாட்சியத்தில்,** கடந்த 01.05.2018ம் தேதி நான் ரெட்டிசாவடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக நிலைய பொருப்பில் இருந்தபோது தூக்கணாம்பாக்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. சக்திவேல் என்பவர் தூக்கணாம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண். 53/2018 சட்டப் பிரிவு 279, 337, 304 -அ இதசவின் படி அப்போதைய காவல் ஆய்வாளர் திரு. வெங்கடேசன் என்பவர் வழக்கு பதிவு செய்து மேல்விசாரணைக்காக வைத்திருந்ததை எடுத்துக்கொண்டு சம்பவ இடமான ஸ்ரீ அன்னை ஹாலோபிளாக் இடத்திற்கு சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை சாட்சிகள் அழகானந்தன், கர்ணண் இவர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ-6 வரைந்து சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் உடன் புறப்பட்டு பாண்டிச்சேரி இந்திராகாந்தி மருத்துவமனை சென்று அங்கு

வைக்கப்பட்டிருந்த இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்களுக்கு சம்மன் சார்வு செய்து பிரேத விசாரணை செய்து இறப்பின் காரணம் அறியும் பொருட்டு உள்ளிருக்கும் மருத்துவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் வைத்து திரு. சுகுமார் அவர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் சாட்சிகள் தமிழரசன், த/பெ. குமார், கந்தன், முத்தரசு, ஐயப்பன், தமிழரசன் த/பெ. தெய்வலிங்கம், குமார், வைத்தியநாதன், ரவிக்குமார், கார்த்திக், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரி தமிழ்ச்செல்வன் த/பெ. தெய்வலிங்கம் என்பவர் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு தாமாக காவல் நிலையம் ஆஜரானவரை கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து தக்க இரு நபர் ஜாமீனில் அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமாக PY-05-W-8750 என்ற பதிவெண்கொண்ட கீரோ ஸ்பிலண்டர் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, சிகிச்சையில் இருந்த தமிழ்ச்செல்வன் என்பவருக்கு விபத்தில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று வழங்கிய மருத்துவர் ஜெயஸ்ரீ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் பிரேத விசாரணை மேற்கொண்ட மருத்துவர் திரு. ராஜேஷ் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சக்திவேல் இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 பெற்று வந்து, பின்னர் மருத்துவமனைக்கு சென்று மருத்துவரை விசாரித்ததில் இறந்துபோன நபர் தமிழ்வாசன் (எ) முருகன் என்பவருக்கு விபத்தில் தலையில் பலத்த காயம் இறந்ததாகவும், எதிரி தமிழ்ச்செல்வன் என்பவருக்கும் அவருடன் வந்த அ.சா.1 தமிழரசன் என்பவருக்கும் கொடுங்காயம் என்று சான்று அளிக்கப்பட்டது. மேற்படி காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ 9 பெற்று வந்து, பின்னர் இவ்வழக்கின் சட்டப் பிரிவுகள் 279, 337, 304-அ இதசவில் இருந்து சட்டப் பிரிவுகள் 279, 338, 304-அ இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 10 தயார் செய்து, பின்னர் புலன் விசாரணை முடித்துவிட்டு வண்டியை ஓட்டி வந்த எதிரி தமிழ்ச்செல்வன் என்பவர் மீது சட்டப் பிரிவுகள் 279, 338, 304-அ இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

16) இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

17) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

18) **விவாதம்**:-

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து எதிரி மீதான குற்றம் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

19) **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**:-

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## தீர்வு

20) இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

21) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1, முதல் விசாரணையில், கடந்த 01.05.2018 அன்று செந்தில் என்பவரில் பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு, திரும்ப வீட்டிற்கு வருவதற்காக முருகன் வண்டியை ஓட்டிக்கொண்டும், நான் வண்டியில் அமர்ந்து கொண்டும் இரவு 8.00 மணியளவில் நல்லாத்தூர் பேருந்து நிறுத்தம் அருகே வந்துகொண்டிருந்தபோது ரோட்டில் உள்ள கல்லின் மீது

வண்டியை ஏற்றி இறக்கியதில் இருவரும் கீழே விழுந்துவிட்டோம். அதில் எனக்கு பின்தலையில் அடிப்பட்டது. முருகனுக்கு எங்க அடிப்பட்டது என்று எனக்கு தெரியாது. மருத்துவமனையில் உள்நோயாளியாக சிக்சசையில் இருந்தபோது தூக்கணம்பாக்கம் போலிசார் விசாரணை செய்து எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். கையொப்பம் இடும்போது அதில் எதுவும் எழுதப்படாத வெள்ளைதாளாக இருந்தது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு எதரியாது என்று அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார். அரசுத்தரப்பு குறுக்கு விசாரணையின்போதும் அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

**22)** வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2, இரவு சுமார் 11.00 மணியளவில் நானும், முத்துரசன் என்பவரும் காசாப்பாளையத்திலுள்ள ரெட்டியார் நிலத்தில் தண்ணீர் பாய்த்துகொண்டிருந்தபோது ரோட்டில் திடீர் என்று சத்தம் கேட்டது ஓடிச்சென்று பார்த்தபோது ரோட்டிலுள்ள பள்ளத்தில் இருசக்கர வாகனத்திலிருந்து விழுந்து எதிரி மற்றும் இன்னொரு நபர் மற்றும் இறந்துபோன நபர் ஆகியோர் மூவரும் அடிப்பட்டு கிடந்தனர் என்று அரசுத்தரப்பில் பகுதியளவு பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**23)** வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3, இரவு சுமார் 11.30 மணியளவில் நானும், கந்தன் என்பவரும் காசாப்பாளையத்தில் உள்ள ராமகிருஷ்ணன் ரெட்டியார் நிலத்தில் தண்ணீர் பாய்த்துகொண்டிருந்தபோது அன்னை ஹாலோ பிளாக் சிமெண்ட் கடைக்கு எதிரே சத்தம் கேட்டது நாங்கள் சென்று பார்த்தபோது தமிழரசன், தமிழ்வாசன், தமிழ்செல்வம் ஆகியோர் அடிப்பட்டு கிடந்தனர் என்று அரசுத்தரப்பில் பகுதியளவு பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**24)** அ.சா.2 மற்றும் அ.சா.3ன் சாட்சியங்களை கண்ணுறும்போது, அ.சா.2 மற்றும் அ.சா.3 வழக்கு சம்பவத்தின் சத்தம் கேட்டு வந்து தான் பார்த்துள்ளார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து, அ.சா.2 மற்றும் அ.சா.3 வழக்கு சம்பவத்தை

கண்ணுற்ற சாட்சி அல்ல என்று தெரிகிறது.

**25)** அ.சா.4, தனது சாட்சியத்தில், கடந்த 6 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்ததாக தமிழரசன் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னார். நல்லாத்தூரில் உள்ள ஹாலோ பிளாக் கல் செய்யும் இடத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது கீழே விழுந்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார். சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது மூன்று பேரும் அடிப்பட்டு கீழே இருந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் அ.சா.4 குறுக்கு விசாரணையில் **"விபத்து எப்படி நடந்தது என்று அப்போது எனக்கு தெரியாது**" என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து, அ.சா.4ம், தகவலின் அப்படையில் தான் சம்பவயிடத்திற்கு வந்துள்ளார் என்பது தெரியவருகிறது. இதிலிருந்து அ.சா.4ம் வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி அல்ல, கேள்விப்பட்ட சாட்சி என்று தெரிகிறது.

**26)** பார்வை மகசர் சாட்சியான அ.சா.5, 01.05.2018 அன்று நல்லாத்தூரிலிருந்து பள்ளிப்பட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது விபத்து நடந்தயிடமான அன்னை ஹாலோ பிளாக் கம்பெனி அருகே விபத்து நடந்தயிடத்தை பார்வையிட்டு தூக்கணாம்பாக்கம் போலிசார் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் **"ஒரு கையொப்பம் வரைபடத்திலும், ஒரு கையொப்பம் எழுதிய பேப்பரிலும் போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**27)** மற்றொரு பார்வை மகசர் சாட்சியான கர்ணன் (அ.சா.6), நல்லாத்தூரிலிருந்து பள்ளிப்பட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது விபத்து நடந்தயிடமான அன்னை ஹாலோ பிளாக் கம்பெனி அருகே விபத்து நடந்தயிடத்தை பார்வையிட்டு தூக்கணம்பாக்கம் போலிசார் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் **"நான் ஒரு கையெழுத்து தான் போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**28)** பிரேத விசாரணை சாட்சிகளான அ.சா.7, அ.சா.8 மற்றும் அ.சா.9 ஆகியோர்கள் பிரேத விசாரணையின்போது உடனிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**29)** மருத்துவர் திரு.ராஜேஷ் (அ.சா.10), தமிழ்வாசன் (எ) முருகன் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்து, அவரின் இறப்பானது மூளைப்பகுதி மற்றம் ஒட்டுப்பகுதியில் அடிப்பட்ட அழுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களினால் இறந்திருக்கலாம் என்று சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**30)** உதவி ஆய்வாளர் ஓய்வு திரு.சக்திவேல் (அ.சா.11), முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.5) பதிவு செய்து, பின்னர் மேல்விசாரணைக்காக வழக்கின் கோப்பினை காவல் ஆய்வாளர் திருமதி.சரஸ்வதி (அ.சா.12) ன் பார்வைக்கு வைத்த, வழக்கின் கோப்பினை பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர், மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ( அ.சா.ஆ.7), காயச்சான்றிதழ் (அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9) பெற்று வந்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.10) தயார் செய்து, எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சி அளித்துள்ளார்.

**31)** இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை கண்ணுறும் போது, இவ்வழக்கின் எதிரி தான் PY-05-W-8750 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தில் இறந்துபோன தமிழ்வாசன்(எ) முருகன் என்பவரையும், அ.சா.1ஐ உட்கார வைத்துக்கொண்டு, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து கீழே விழ செய்து, தமிழ்வாசன்(எ) முருகன் என்பவருக்கு இறப்பையும், அ.சா.1க்கு கொடுங்கயாத்தையும் ஏற்படுத்தினார் என்று அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும் பொழுது,

**32)** இவ்வழக்கில் புகார்ததாரரான அ.சா.1 அளித்துள்ள சாட்சியத்திலிருந்து, PY-05-W-8750 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தில் இறந்துபோன தமிழ்வாசன்(எ) முருகன் என்பவர் தான் ஓட்டி கொண்டு வந்தார், பின்னால் அ.சா.1 உட்கார்ந்து வந்ததாக சாட்சியம் அளித்துள்ளதால் அரசுதரப்பில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள். கண்ணுற்ற சாட்சி என்று அரசுத்தரப்பில் சொல்லப்படும் அ.சா.2 மற்றும் அ.சா.3 விபத்தை சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் இருந்தவர்கள் கீழே விழுந்து கிடந்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து அ.சா.2 மற்றும் அ.சா.3 வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி அல்ல என்று தெரிகிறது. அ.சா.4 ம் வழக்கு சம்பவத்தை கேள்விபட்டு தான் சம்பவயிடத்திற்கு வந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து அ.சா.4ம் கண்ணுற்ற சாட்சி அல்ல சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி என்று தெரிகிறது. மேலும் பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.6 மற்றும் அ.சா.7, கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எங்களுக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**33)** மேலும், இவ்வழக்கில் இறந்தபோன தமிழ்வாசன்(எ) முருகன் என்பவர் அன்றைய தினம் விபத்தில் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயங்களினால் இறந்துள்ளார் என்றும், அ.சா.1க்கு விபத்தில் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளபோதிலும், அந்த காயங்கள் அவர்களுக்கு ஏற்பட்ட விபத்தினால் ஏற்பட்டது என்று நிரூபிக்கப்பட்டுள்ளபோதிலும், அந்த விபத்து எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையான செயலால் ஏற்படுத்தப்பட்டதா என்று பார்க்கும் பொழுது, விபத்தில் காயமுற்ற சாட்சியான அ.சா.1, விபத்து நடந்த அன்றையதினம் இருசக்கர வாகனத்தை இறந்துபோன தமிழ்வாசன்(எ) முருகன் என்பவர் தான் ஓட்டி வந்தார் என்று கூறியுள்ளதிலிருந்து, உண்மையில் விபத்து நடந்த அன்று இருசக்கர வாகனத்தை எதிரி ஓட்டி வந்தாரா இல்லை, தமிழ்வாசன்(எ) முருகன் என்பவர் ஓட்டி வந்தாரா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் சூழ்நிலையில், மற்ற கண்ணுற்ற சாட்சிகளும், விபத்தை நேரடியா பார்க்கவில்லை என்று இந்நீதிமன்றத்திற்கு தெரியவருவதால், ஆஜர் எதிரி தான் PY-05-W-8750 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தை கவனக்குறைவான மற்றும் அதிவேகமாக ஓட்டி வந்ததால் விபத்து ஏற்பட்டது என்று சாட்சிகள் மற்றும்

ஆவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்படாததால், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**34)** முடிவாக, இவ்வழக்கில் எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 338, 304 அ-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**35)** எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

**36)** இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதும் இல்லை.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 18.05.2026-ந் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SRINITHI R
Digitally signed by SRINITHI R
Date: 2026.05.18 17:11:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

கடலூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

அசா.1 திரு. தமிழரசன்

அசா.2 திரு. கந்தன்

அசா.3 திரு. முத்தரசன்

அசா.4 திரு. தமிழரசன்

அசா.5 திரு. அழகநாதன்

அசா.6 திரு. கர்ணன்

அசா.7 திரு. ரவிக்குமார்

அசா.8 திரு. கார்த்திக்

அசா.9 திரு. செல்வம்

அசா.10 திரு. ராஜேஷ் (மருத்துவர்)

அசா.11 திரு. சக்திவேல் (உதவி ஆய்வாளர் ஓய்வு)

அசா.12 திருமதி. சரஸ்வதி (காவல் ஆய்வாளர்)

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அசாஆ.1 | 01.05.2018 | புகார் வாக்குமூலம் |
| அசாஆ.2 | 01.05.2018 | அ.சா.5ன் கையொப்பத்துடன் கூடிய பார்வை மகசர் |
| அசாஆ.3 | 01.05.2018 | பார்வை மகசரிலுள்ள அ.சா.6ன் கையொப்பம் |
| அசாஆ.4 | 01.05.2018 | சடலக்கூறாய்வு ஆய்வறிக்கை |
| அசாஆ.5 | 01.05.2018 | கணினி முதல் தகவல் அறிக்கை |
| அசாஆ.6 | 01.05.2018 | மாதிரி வரைபடம் |
| அசாஆ.7 | 02.05.2018 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (PY-05-W-8750) |
| அசாஆ.8 | 03.12.2018 | அ.சா.1க்கான காயச்சான்றிதழ் |
| அசாஆ.9 | 30.04.2018 | இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் என்பவருக்கான காயச்சான்று |
| அசாஆ.10 | 30.04.2018 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருள் - இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள் - இல்லை**

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.05.18 17:11:03 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

கடலூர்.

**குறிப்பு**

1. விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை

**நகல்**

1. மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர், கடலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.